கன்னியாகுமரி தேவசம் குழு [1975 அக்டோபர் 27

* 82 வினா—**திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை** : மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட **வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) கன்னியாகுமரி மாவட்ட தேவசம் போர்டை மாற்றி யமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (மூன்றாவது திருத்தம்) சட்டம் செயலுக்கு வந்ததையொட்டி, கன்னியாகுமரி தேவசம் குழுவை மாற்றி அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏது மில்லை. ஆனால் மேற்சொன்ன திருத்தச் சட்டத்தின் விதித்துறை களின் கீழ் அறங்காவலர் குழுவை அமைப்பதற்கான விண்ணப் பங்கள் கேட்கப்பட்டு, அறங்காவலர்கள் ஆணையரால் நியமிக்கப் பட்டுள்ளனர்.

திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவிதாங்கூர்-கொச்சி சட்டத்தின்படி 'அட்டான மஸ் பாடி' என்ற முறையில் சுயாட்சி அதிகாரத்தோடு இருந்த தேவசம் போர்டை மாற்றியமைத்து, இப்பொழுது குறைந்த அதிகாரத்தோடு குழு மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டிருக் கிறது. அப்படியானால் ஏன் கன்னியாகுமரி மாவட்டத்தில், பல யிடங்களிலும் ஒவ்வொரு கோயிலுக்கும் இருப்பதைப்போல, இங்கும் ஒவ்வொரு கோயிலுக்கும் தனிக்குழு அமைக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இது அதிகாரம் குறைந்தது என்று சொல்ல முடியாது. ஏற்கனவே இருந்த தேவசம் குழுவில், குழு உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமை ஒரு காரணம். இரண்டாவது காரணம், நிர்வாகம் அந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படாத காரணத்தால், ஏற்கனவே இருக்கின்ற இந்து சமய அறநிலையச் சட்டத்தினால் பல கோயில்களிலேயும் சிறந்த முறையில் நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வருவதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தனிப்பட்ட அப்படியொரு சட்டம் தேவையில்லை என்று கருதி, மாநிலத்தின்

1975 அக்டோபர் 27]

மற்றப் பகுதிகளுக்கு உள்ள அந்தச் சட்டத்தையே கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் நீடித்திருக்கிறோமே தவிர வேறல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இப்பொழுது புதிதாக ஒரு கமிட்டி அமைந்திருப்பதாக அறிகிறேன். அதிலே யார்யாரெல்லாம் அங்கம் வகிக்கிறார்கள். அதிலே யார் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்? அதுமட்டுமின்றி, இந்த போர்டிலே முன்னாலே பணியாற்றி வந்த ஊழியர்களை அரசாங்க உத்தியோகஸ்தர்களாக எண்ணப்படுமா? ஏனென்றால், நீண்டகாலமாக அந்த இலாக்காவிலே அவர்கள் பணியாற்றி வந்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு வேறு இலாக்காக்களிலே மாற்றம் ஏற்படுத்த முடியாது. ஆகவே, இதைப் பரிவோடு கவனிக்க இந்த அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, யார் யார் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. தலைவரைத் தேர்ந்தெடுக்க, ஐந்துபேர் கொண்ட குழு தேர்தலை நடத்தித் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த அறங்காவலர் குழுத் தலைவர் தேர்தல் இன்னும் நடைபெறவில்லை என்று கருதுகிறேன். ஊழியர்களைப் பொறுத்தவரையில் மற்றக் கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள், சம்பள விகிதங்கள் வழங்கப்பட்டு வருகிறதோ அதே சம்பள விகிதங்கள் எதிர்காலத்தில், கன்னியாகுமரி தேவசம் குழுவில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் வழங்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, புதிய சட்டத்தை நிறைவேற்றியபொழுது அங்கே ஏற்கனவே தேவசம் போர்டில் பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்கள் பாதிக்கப்படாத முறையில் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அன்றைக்கு அமைச்சரவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அந்த அடிப்படையில் இன்னும் பாதுகாக்கப்படக் கூடிய அளவிலே அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்கள் எந்த வகையிலேயும் பாதிக்கப்படாத வகையிலே அரசாங்கம் பாதுகாக்கும்.